(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 284]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 யூன் 20, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2569/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பாதுகாக்கப்பட்ட பிரதேசமென பிரகடனப்படுத்தப்பட்ட புலத்சிங்கல வகுரான வனம் அழிவுற்று வருகின்றது என்பதையும்;

(ii) மிகவும் அரிதான தாவர, விலங்கு வளங்கள் மிக்க இந்த வனத்தை பாதுகாப்பதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) இவ்வனத்தைக் கண்டுகளிப்பதற்காக வருகை தருவோருக்கு தகவல்கள் வழங்குவதற்கானதொரு செயற்திட்டம் இல்லை என்பதையும்;

(iv) படபொத்த கால்வாயினூடாக வகுரான வனத்திற்கு கழிவுகள் வந்தடைவதை நிறுத்துவதற்கானதொரு செயற்திட்டம் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட கூருணர்வுடனான சுற்றாடல் வலயத்திற்கு பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களின் சேவையைத் துரிதமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2702/ '12

2.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பிரிவேனாக்களில் கல்வி பெறும் பிக்குமார்கள் பெரும் பொருளாதாரக் கஷ்டங்களின் மத்தியில் தமது கல்வி அலுவல்களைச் செய்து வருகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது பிரிவேனாக்களில் கல்வி பெறும் ஒவ்வொரு தீட்சைபெறாத அல்லது தீட்சை பெற்ற மாணவருக்கும் வருடாந்தம் வழங்கப்படும் உதவித் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இப்பணத் தொகை தற்போதைய பொருளாதார நிலைமையுடன் ஒப்பிடும் போது போதியதாக இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

(iii) அப்பணத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

(iv) அவ்வாறாயின் அதிகரிக்கப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2799/ '12

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் கிரிகெட் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமை வழங்கப்பட்டுள்ள தொலைக்காட்சி அலைவரிசை யாது என்பதையும்;

(ii) அந்த உரிமை கையளிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) கையளிக்கப்பட்ட ஒளிபரப்பு உரிமை செல்லுபடியாகும் கால எல்லை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய நிறுவனத்துக்கு கிரிகெட் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையை வழங்குதல் அங்கீகரிக்கப்பட்ட முறைக்கமைய விலைமனுக்கள் கோரப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்காக விலை மனுக்களை சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) கிரிகெட் போட்டிகளின் ஒளிபரப்பு உரிமையை வழங்குவதற்காக மேற்கூறிய நிறுவனத்தினால் இலங்கை கிரிகெட் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2824/ '12

4\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உரிய செயல்முறைகளைப் பின்பற்றாமல் முப்படைகளை விட்டு விலகிய நபர்களின் எண்ணிக்கையினையும்;

(ii) படைகளை விட்டு அவர்கள விலகுவதற்கான காரணங்களையும்;

(iii) அவர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையையும்;

(iv) அவ்வாறு விலகுவது இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கையினையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த 3 வருடங்களாக முப்படைகளுக்கும் ஏற்பட்ட செலவினை வருடாந்த அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3053/ '12

5\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலிகம கனிஷ்ட வித்தியாலயத்தில் தற்போது கல்வி கற்கும் 249 மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக மூன்று ஆசிரியர்கள் மாத்திரமே இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் மேலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) தொழிலற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை கோரி குறிப்பிட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள கடும் சிரமங்கள் தொடர்பாக ஆராய்ந்து அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3253/ '12

6.

கௌரவ பி. ஹரிசன்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்தற்கு,— (1)

(அ) (i) 2012 நவம்பர் மாதம் 09 ஆந் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலுக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) அன்றைய தினம் சிறைச்சாலையை சோதனையிடுவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டமைக்கான காரணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சோதனையிடுதல் போதியதாயில்லாமையா என்பதையும்;

(iii) இதற்காக அந்த படையணியை ஈடுபடுத்துவதற்கு கட்டளை வழங்கியவர் யார் என்பதையும்;

(iv) சிறைச்சாலையை சோதனையிடும் பணியில் ஈடுபட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) இவர்கள் சிறைச்சாலைக்குள் ஆயுதங்களுடன் பிரவேசித்தார்களா என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட மோதலில்,

(i) கைதிகளுக்கு ஆயுதக் களஞ்சியத்தில் பிரவேசித்து ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் உதவி கிடைத்ததா என்பதையும்;

(ii) மதுவரித் திணைக்களத்தின் போதைப்பொருள் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரின் தனிப்பட்ட தேவையின் அடிப்படையில் கைதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) சிறைக்கைதிகளின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) சிறைச்சாலை ஆயுதக் களஞ்சியத்திலிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்கு கைதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) உயிரிழந்த கைதிகள் சார்பில் நட்டஈட்டுத் தொகையொன்றைச் செலுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(iii) இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2575/ '12

7.

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திவிநகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்குகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து திவிநகும நிகழ்ச்சித் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் பயனாளிகள் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திவிநகும நிகழ்ச்சித் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை மில்லியன்களில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்குகள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மேற்படி இலக்குகளில் எவ்வளவு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2703/ '12

8.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கிவருகின்ற பிரிவேனாக்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்களுக்கு அரசாங்க பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற இலவச புகையிரத பயணச் சீட்டு, குறைந்த வட்டியில் வழங்கப்படும் ஆதனக் கடன் மற்றும் இடர் கடன் ஆகியன வழங்கப்படுவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) சமனான சேவையை நிறைவேற்றும் ஆசிரியர்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு விதத்தில் கவனித்தல் நியாயமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில் , மேற்படி நிலைமையை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2800/ '12

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரத்தில் 'தெயட்ட கிருள' கண்காட்சி நடைபெற்ற ஓயாமடுவ வீதியில் மூன்று கிலோமீட்டர் தூரம் காபட் இட்டு திருத்துவதற்காக வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை செலவிட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வீதியைத் திருத்துவதற்கான ஒப்பந்தத்தை வழங்கும் போது அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின், அதற்காக விண்ணப்பித்த ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் பெயர்கள், முகவரிகள் மற்றும் கேள்விப் பத்திரப் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்தை வழங்கிய கம்பனியின் உரிமையாளரினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களினதும் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியைத் திருத்துவதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், கொள்ளப்பட்ட மொத்தக் காணியின் அளவு எவ்வளவு என்தையும்;

(iii) சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களது பெயர்கள், முகவரிகள் மற்றும் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்கூறிய வீதிகளைத் திருத்துவதன் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மதகுகள், பாலங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வீதி இதற்கு முன்னர் திருத்தப்பட்ட திகதி மற்றும் எந்த நிலைமையின் கீழ் திருத்தப்பட்டது என்பவற்றையும்;

(iii) அந்த வருடத்தில் அதற்குச் செலவான பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2887/'12

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் அதிமேதகு சனாதிபதி, கௌரவ அமைச்சர்கள், பிரதான அலுவலர்கள் ஆகியோர் ஐக்கிய இராச்சியம், இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் பொது அவர்களுக்கெதிராக பல எதிர்ப்பார்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அத்தகைய நிகழ்வுகளை நிறுத்துவதற்கு மேற்சொன்ன நாடுகளில் உள்ள இலங்கைத் தூதராலயங்களையும் உயர் ஸ்தானிகராலயங்களையும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் உபயோகிக்க முடியாமலிருக்கிறதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அத்தகைய தர்ம சங்கடமான நிகழ்வுகளுக்காக மேற்சொன்ன நாடுகள் இலங்கையரிடம் மன்னிப்புக் கோரியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில் அது எங்கே, எப்போது, யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(iii) இலங்கை உயர் ஸ்தானிகராலயங்களும் தூதராலயங்களும் சாத்தியமான பிரச்சினைகளை எதிர்பார்த்தனவா என்பதையும் சம்பந்தப்பட்ட நாடுகளின் குறித்த சில பகுதிகளில் அதிகரித்துவரும் கருத்து வேறுபாட்டினால் ஏற்படும் உட்பிளவுகள் மற்றும் அதனால் இலங்கைப் பிரதிநிதிகள் முகம்கொடுக்கவேண்டியுள்ள ஏதாவது தர்மசங்கடமான நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளமை பற்றி இலங்கை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தியிருந்தனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3054/ '12

11\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய அரசின் கீழ் உள்ள 50 வைத்தியசாலைகளின் துப்புரவுப் பணிகளை வெளி நிறுவனங்களினால் மேற்கொள்ளும் பொருட்டு ஆண்டொன்றுக்கு ரூபா 300 மில்லியன் செலவிடப்படுகின்றது என்பதையும்;

(ii) சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலர் காலி கராபிட்டிய வைத்தியசாலையின் துப்புரவுப் பணிகள் தொடர்பான கேள்விப் பத்திரத்தை மோசடியான விதத்தில் மேற்கொள்கின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது கராப்பிடிய வைத்தியசாலையின் துப்பரவுப் பணிகளுக்கான கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள கம்பனி யாதென்பதையும்;

(ii) மேற்படி கேள்விப்பத்திரத்தின்படி மேற்கூறிய கம்பனியினால் மேற்படி வைத்தியசாலையின் துப்பரவுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்கூறிய கம்பனியினால் மேற்படி வைத்தியசாலையின் துப்புரவுப் பணிகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படாத நிலையில் கூட ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட கேள்விப் பத்திரத்தை அதே நிறுவனத்துக்கு வழங்குவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கேள்விப்பத்திரத்தை வழங்குகையில் மோசடியான விதத்தில் செயற்படும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2578/ '12

12\.

கௌரவ சஜித் பிரேமதாச,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடும்பமொன்றுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(iii) குடும்பமொன்றுக்கு வழங்கப்படும் நிவாரணங்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிவாரணங்கள் குடும்பமொன்றுக்கு போதுமானதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2704/ '12

13\.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு பூராவும் உள்ள பிரிவேனாக்களின் அலுவல்களை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பிரிவேனா பரிசோதகர்களான தேரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பரிசோதகர்களான தேரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் கல்வித் தகைமைகள் தனித் தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவி வகிக்கின்ற தேரர்களின் வினைத்திறனின்மை மற்றும் குறைந்த கல்வித் தகைமைகள் காரணமாக பிரிவேனாக் கல்வி வினைத்திறனற்றதாக மாறியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி நிலைமையை தவிர்ப்பதற்காக தகைமைகளுள்ள உத்தியோகத்தர்களை மேற்படி பதவிகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல்,ஏன்?

2804/ '12

14\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டையில் நடாத்தப்பட்ட "பீச் வொலிபோல்" போட்டித் தொடர் நடைபெற்ற திகதிகள் யாவை என்பதையும்;

(ii) இதற்கென அரசு செலவிட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குறித்த பணம் செலவிடப்பட்ட விதம் யாதென்பதையும்;

(iv) குறித்த போட்டித் தொடரை ஏற்பாடு செய்தவர்கள் யாவர் என்பதையும்;

(v) அதில் பங்குபற்றிய நாடுகள் யாவை என்பதையும்;

(vi) இதில் பங்குபற்றிய விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) இதில் இலங்கை விளையாட்டு வீரர்கள் ஈட்டிய வெற்றிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2888/ '12

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாறு வெளிநாடுகளால் இலங்கையில் நியமிக்கப்பட்டுள்ள கௌரவ கொன்சுலேர்களின் எண்ணிக்கை என்ன என்பதையும்;

(ii) மேற்படி கொன்சுலேர்களின் பெயர்களை அவர்களின் நாடுகளுடனும்;

(iii) அவர்கள், தம் நாடுகளை இலங்கையில் என்ன திகதியில் இருந்து பிரதிநிதித்துவம் செய்கிறார்கள் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சுனாமி தாக்கத்தின் போது கிடைத்த ஏதாவது நன்மையைத் தவிர, ஒவ்வொரு கொன்சுலேற்றினதும் பதவிக் காலத்தின் பொழுது இலங்கையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மையை தனித்தனியாகவும்;

(ii) இலங்கையில் அவர்கள் மேற்கொள்ளும் விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு அவர்கள் அறிக்கை செய்துள்ளார்களா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ திலும் அமுணுகம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"டென்ஸ்ரீ கல்வி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

15.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

அல் ஜாமியாத்துல் கஸ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

17.

இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.